**03.07.2025**

**MCOP.No.25/2017**

**மசா.2 - விக்னேஷ்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3) விபத்து நான் தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகாரின் சான்றிட்ட நகல் இதுதான். அது எ.ம.சாஆ. 1 ஆகும். மேற்படி இறந்து போன பாலாஜி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான மருத்துவ பதிவேடு என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். அது எ.ம.சா.ஆ.2 ஆகும். குற்றவியல் வழக்கில் வாழப்பாடி நடுவர் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். நான் கொடுத்த புகாரில் காரின் வலது புறம் முன்பகுதியில் மோதி விபத்து ஏற்படுத்தியதாக தான் குறிப்பிட்டுள்ளேன். நான் பயணித்த காரில் ஏர் பேக் வசதி இருந்தது என்றால் சரிதான். மேற்படி காரில் நான் பயணித்தபோது சீட் பெல்ட் அணிந்து இருந்ததாக புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை. சாட்சி அணிந்து இருந்ததாக தெரிவிக்கிறார்.

4) நான் காரில் சென்ற போது சீட் பெல்ட் அணியாததால் தான் அதை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. லாரி காரின் மீது மோதி கவிழ்ந்தது. (407 லாரி) குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த போது மேற்படி லாரி கவிழ்ந்து நாங்கள் வந்த காரின் மீது மோதியதாகத்தான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள தேதி 30.03.2016 12.25AM என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் புகாரில் விபத்து நடந்த சமயம் 30.03.2016 இரவு 09.45 மணி என்று குறிப்பிட்டுள்ளேன்.

5) 407 லாரியின் ஓட்டுநர் இந்த விபத்தை ஏற்படுத்தவில்லை என்றும் இறந்து போன பாலாஜிக்கும் இந்த விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

லாரி கவிழ்ந்த விபத்தை பயன்படுத்திக்கொண்டு பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.07.03 17:58:14 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**